## பாடம் - 3

## الدرس الثالث

## நெஞ்சு பிளக்கப்படுதல்

## شق الصدر

நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் நான்கு வயதை நெருங்கி விட்டபோது ஒரு நாள் ஹலீமாவின் மகனான தமது பால்குடிச் சகோதரருடன் கூடாரங்களை விட்டும் தூரமாக விளையாடிக்கொண்டிருந்தார்கள். ஹலீமாவின் மகன் ஓடி வந்தார். அவரது முகத்தில் திடுக்கத்தின் அடையாளம் தெரிந்தது. தன்னுடைய தாயிடம் தன் குறைஷிச் சகோதரரைக்காண வரும்படிக் கேட்டுக் கொண்டார்.

நடந்த விஷயம் என்னவென்று தாய் அவரிடம் கேட்கவும் அதற்கு அவர், ‘வெண்மையான ஆடையில் இரு மனிதர்களைக் கண்டேன். அவ்விருவரும் எங்களிடமிருந்து அவரைப் பிடித்து அவரைப் படுக்கவைத்து அவரின் நெஞ்சைப் பிளந்தனர்’... என்று செய்தியைப் பூரணமாக முடிப்பதற்கு முன் ஹலீமா நபிகள் நாயகத்திடம் விரைந்து சென்றார். அப்போது அந்த இடத்திலேயே அவர்கள் அசையாமல் நிற்பதைக் கண்டார். அவர்களது முகத்தில் மஞ்சள் நிறம் படிந்திருந்தது. அவர்களின் நிறம் பயத்தால் மாறியிருந்தது. என்ன நடந்தது என்று அவர்களிடம் கைசேதத்துடன் கேட்டார்.
அதற்கவர்கள் தாம் நலமுடன் இருப்பதாகவும் தம்மிடம் வெண்மையான ஆடையில் இரு மனிதர்கள் வந்து தம்மைப் பிடித்து தமது நெஞ்சைப் பிளந்து இதயத்தை வெளியே எடுத்து அதிலிருந்து ஒரு கருப்புத் துண்டை அகற்றி அதை எறிந்து விட்டார்கள். பிறகு இதயத்தை குளிர்ந்த நீரால் கழுவி உள்ளே வைத்து விட்டு நெஞ்சின் மேல் கையால் தடவினார்கள். அதன் பிறகு அவ்விருவரும் அவ்விடத்தை விட்டுச் சென்று மறைந்து விட்டனர் எனவும் நடந்ததைக் கூறினார்கள். ஹலீமா பிளந்த இடத்தைத் தடவிப்பார்த்தார். எந்த அடையாளத்தையும் காணவில்லை. பிறகு நபிகள் நாயகம்(ஸல்)அவர்களைக் கூடாரத்திற்குக் கூட்டிவந்தார்.

அடுத்த நாள் காலையில் நபியவர்களை அவர்களின் தாயாரிடம் திரும்பக் கொண்டு சென்றார். ஹலீமா குழந்தையைத் திரும்பக் கொண்டு வந்தது ஆமினாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. அது திரும்பக் கொண்டு வருவதற்குரிய நேரமல்ல. அது மட்டுமல்ல ஹலீமாவுக்கு அக்குழந்தையின் மீது ஆர்வமும் இருந்ததே! எனவே திரும்பக் கொண்டு வந்த காரணத்தைக் ஆமினா அவரிடம் கேட்டார். அதற்கு ஹலீமா நெஞ்சு பிளக்கப்பட்ட நிகழ்ச்சியைக் கூறினார்.

ஆமினா தன் அநாதைக் குழந்தையுடன் பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்த தன் மாமன்மார்களை சந்தித்து வருவதற்காக மதீனாவுக்குச் சென்றார். அங்கு சில நாட்கள் தங்கியிருந்து விட்டு திரும்பும் வழியில் அப்வாஃ என்னுமிடத்தில் ஆமினா மரணமடைந்தார். அங்கேயே அடக்கமும் செய்யப்பட்டார்.

இதோ! நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் தமது ஆறாம் வயதில் தாயையும் இழந்து விடுகிறார்கள். இவற்றுக் கெல்லாம் ஈடான அரவணைப்பையும் ஆதரவையும் நபியவர்களுக்கு அளிப்பது பாட்டனார் அப்துல் முத்தலிபின் கடமையாக ஆனது. அப்துல் முத்தலிப் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களைப் பேணிப் பராமரித்துவந்தார். அவர்கள் மீது அன்பு செலுத்தி வந்தார். நபிகள் நாயகம்(ஸல்)அவர்களுக்கு எட்டு வயது இருக்கும்போது அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிபும் மரணமடைந்தார். அதன் பிறகு நபியவர்களை அவர்களின் பெரிய தகப்பனார் அபூதாலிப் தமது பொறுப்பில் எடுத்துக் கொண்டார். அவருக்கு குழந்தைகள் அதிகமாக இருந்தும் பொருளாதாரம் குறைவாக இருந்தும் இவ்வாறு ஏற்றுக் கொண்டார். அவரும் அவரது மனைவியும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தங்களின் பிள்ளைகளில் ஒருவராகவே நடத்திவந்தனர். அநாதையான அக்குழந்தை பெரியவயதை அடையும்வரை தம் பெரியதகப்பனாருடனேயே வாழ்ந்துவந்தது.

இத்தகைய சூழ்நிலையில் தான் நபியவர்களது ஆரம்பகால வாழ்க்கை துவங்கியது. உண்மை, நம்பிக்கை, நாணயம் ஆகிய நற்பண்புகளின் மீது வளர்ந்து வந்தார்கள். உண்மையாளர், நம்பிக்கைக்குரியவர் என்பது அவர்களை அறிமுகப்படுத்தும் சிறப்புப் பட்டப்பெயராய் ஆனது. நம்பிக்கைக்குரியவர் அல்லது உண்மையாளர் வந்துவிட்டாரெனக் கூறப்பட்டால் நிச்சயமாக அது நபிகள் நாயகம் தான் என்று அறியப்பட்டது. சிறிது பெரியவராக அவர்கள் வளர்ந்த பின்பு தமது வாழ்கை விவகாரங்களிலும் சம்பாத்தியத்திலும் தமது சொந்தக்காலில் நிற்க ஆரம்பித்தார்கள். அந்த வகையில் தமது உழைப்பு மற்றும் சம்பாத்தியத்தின் பயணத்தைத் தொடங்கினார்கள். குறைஷிகளில் ஒருவரிடம் அற்பமான கூலிக்கு ஆடுகள் மேய்க்கும் வேலையைச் செய்தார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் ஷாம் தேசத்திற்குச் செல்லும் ஒரு வியாபாரக் கூட்டத்தில் பங்கேற்றார்கள். அவ்வியாபாரத்தில் குவைலதின் மகள் கதீஜா அதிகமான செல்வத்தை முதலீடு செய்திருந்தார். விதவையான அவர் பெரும் செல்வச் சீமாட்டி! அந்தப் பயணத்தில் கதீஜாவின் பொருள்களுக்கு அவருடைய அடிமையும் அவரின் காரியங்களை நிர்வகிப்பவருமான மைஸரா என்பவர் பொறுப்பாளராக இருந்தார். நபிகள் நாயகம்(ஸல்)அவர்களின் பாக்கியத்தாலும் அவர்களின் நாணயத்தாலும் கதீஜாவுக்கு இதற்கு முன்னர் கிடைக்காத அளவுக்கு மிகப்பெரும் இலாபம் கிடைத்தது.
இப்பெரும் லாபத்திற்குரிய காரணத்தை தனது அடிமை மைஸராவிடம் கதீஜா கேட்டார். அதற்கவர், 'இவ்வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கலுடைய பொறுப்பை அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மத் ஏற்றிருந்தார். மக்கள் அவரை நோக்கி பெரும் பெரும் கூட்டமாக வந்தனர். மேலும் இப்பெரும் இலாபம் எவ்வித அநியா யமின்றிக் கிடைத்தது" எனத் தெரிவித்தார். தனது அடிமை மைஸரா சொல்வதை கதீஜா மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அவரும் அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மதைப் பற்றி சில விஷயங்களை அறிந்திருந்தார்.

இப்போது அவரின் மீது அவருக்கு அதிகமான பிரியம் ஏற்பட்டு அவரைத் திருமணம் செய்துகொள்ளவும் விரும்பினார். இவ்விஷயத்தில் முஹம்மதுடைய விருப்பத்தைத் தெரிந்து வருவதற்காகத் தன்னுடைய உறவினர்களில் ஒரு பெண்ணை தூது அனுப்பினார். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருபத்தைந்து வயதை எட்டியிருந்தார்கள். கதீஜாவை மணந்து கொள்ளக் கேட்டு நபியவர்களிடம் அந்தப் பெண் தூது வந்தபோது அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள். திருமணம் முடிந்தது. அவ்விருவரும் ஒருவரைக் கொண்டு ஒருவர் பாக்கியம் அடைந்தனர்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கதீஜாவின் சொத்துக் காரியங்களை நிர்வாகம் செய்ய ஆரம்பித்தார்கள். அதில் தமது கவனத்தையும் சக்தியையும் செலுத்தினார்கள். சில வருடங்கள் கழிந்தன. கதீஜா தொடர்ந்து கருவுற்று ஸைனப், ருகைய்யா, உம்முகுல்ஸூம், ஃபாத்திமா ஆகிய பெண்மக்களையும் காசிம், அப்துல்லாஹ் என இரு ஆண் மக்களையும் பெற்றெடுத்தார்கள். காசிம், அப்துல்லாஹ் ஆகிய இருவரும் சிறுவயதிலேயே இறந்துவிட்டார்கள்.